8. அறிவிப்புகள்.

(அ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு ஹோமியோபதி மருத்துவர்கள் சட்ட முன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தமிழ்நாடு 1971-ம் ஆண்டு ஹோமியோபதி மருத்துவர்கள் சட்ட முன்வடிவை பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.

7. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஈ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு ஹோமியோபதி மருத்துவர்கள் சட்டமுன்வடிவு (சட்டப்பேரவை சட்டமுன்வடிவு எண் 25/1971.)

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, "தமிழ்நாடு 1971-ம் ஆண்டு ஹோமியோபதி மருத்துவர்கள் சட்டமுன்வடிவை * (சட்டப்பேரவை சட்டமுன்வடிவு எண். 25/1971) ஆய்வு செய்வதற்காக பதினெட்டு உறுப்பினர்கள் அடங்கிய 12 சட்டப்பேரவை உறுப்பினர்களும், 6 சட்ட மேலவை உறுப்பினர்களும்) கூட்டாய்வுக் குழு ஒன்றை அமைக்க சட்ட மேலவையின் இசைவைப் பெறுவதுடன் இக்கூட்டாய்வுக் குழுவில் கீழ்க்கண்ட பேரவை உறுப்பினர்கள் பணியாற்ற தேர்ந்தெடுக்கப்படவேண்டும்" என்று கேட்டுக்கொள்கிறேன்.

1. மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து.
2. திருமதி ஜோதி வெங்கடாசலம்.
3. திரு. மணலி சி. கந்தசாமி.
4. திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன்.
5. திரு. ஏ. சுப்பிரமணியம்.
6. டாக்டர் எச். வி. ஹாண்டே.
7. திரு. ஏ. சுவாமிதாஸ்.
8. திரு. நா. வீராசாமி.
9. திரு. பெ. மலைச்சாமி.
10. திரு. எஸ். முருகையன்.
11. திரு. க. உரொ. எட்மண்ட்.
12. ப. முத்துசாமி.

திரு. கே. டி. கே. தங்கமணி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஹோமியோபதி பில் சம்பந்தப்பட்ட வரையில்...

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, on a point of order. Once the Bill is referred to a Joint Select Committee, is the discussion on it allowed on the floor of the House? I would like to have clarification on this point.

MR. DEPUTY SPEAKER : It is allowed.

---

* 23—7—71-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.